

நெல்லை மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம், வார்டு 39,மகாராஜாநகர்,2.வது பிரதான சாலை,நூலகம் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவிருக்கும் நியாய விலை கடை கட்டடத்திற்கு,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப் அடிக்கல் நாட்டி, பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மேயர்.கோ. ராமகிருஷ்ணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜு,நெல்லை கிழக்கு மாநகர கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் தினேஷ்,பாளை தெற்கு பகுதி பொறுப்பாளர் அன்டன் செல்லதுரை,பொதுக்குழு உறுப்பினர் நடராஜன்,கழக நிர்வாகிகள் வல்லநாடு முத்து,வெங்கடேஷ்,பால மகேஷ், அக்பர் ஷரீஃப்,கோபால்தாஸ், மாமன்ற உறுப்பினர் சீதா பாலன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலன் என்ற ராஜா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான சதுரங்கம், ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் ஆகிய போட்டிகள் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் நடைபெற்ற மாநில அளவிலான சதுரங்கம், ஓவியம், கட்டுரை, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகளில் 1600க்கும் மேற்பட்டவர்களும் கலந்து கொண்டனர். போட்டிகளை மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கினார். நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் பெருங்கற்கால தளங்களின் நிலை என்ன ?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, டிச.10- நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. எம்.பி தமிழச்சி தங்கபாண்டியன், தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் தொடர்பாக பல கேள்விகளை கேட்டு இருந்தார்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் சென்னை மற்றும் திருச்சி வட்டங்களின் கீழ் உள்ள 400க்கும் மேற்பட்ட ஒன்றிய பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்களில் கிட்டத்தட்ட 157 வெவ்வேறு வகையான பெருங்கற்கால நினைவுச்சின்னங்கள் உள்ளன என்பது உண்மையா?

ஆங்கிலேயே ஆட்சியின் போது அடையாளம் காணப்பட்ட சில பெருங்கற்கால தளங்கள் இப்போது விரிவான விவசாயம், விரைவான நகரமயமாக்கல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் காரணமாக முற்றிலும் கண்டுபிடிக்க முடியாதவை என்பது உண்மையா?

அத்தகைய பெருங்கற்கால தளங்களின் பட்டியலைக் கண்டறிந்து பதிவு செய்ய இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் சமீபத்தில் ஏதேனும் கணக்கெடுப்பை நடத்தியதா?

சென்னையில் அவற்றின் நிலை என்ன? என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டு இருந்தது.

இதற்கு ஒன்றிய சுற்றுலா மற்றும் கலாசாரத்துறை அமைச்சர்கஜேந்திரசிங் ஷெகாவத் எழுத்துப்பூர்வமாக பதில் தெரிவித்தார்.

அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழ்நாட்டில், சென்னை மற்றும் திருச்சி வட்டங்களை உள்ளடக்கிய, இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் அதிகார வரம்பின் கீழ், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 412 பழங்கால நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்கள் உள்ளன. இவற்றில், வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த பெருங்கற்கால நினை வுச்சின்னங்கள் 158 ஆகும்.

நினைவுச்சின்னங்கள் அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பெருங்கற்கால தளங்கள் எதுவும் கண்டுபிடிக்க முடியாததாகமாறவில்லை. சில பெருங்கற்கால தளங்கள் தொடர்பாக பாதுகாப்பு அறிவிப்புகளை திரும்பப் பெறக் கோரி தனிநபர்களிடம் இருந்தும், குடியிருப்போர் நலச்சங்கங்களிடம் இருந்தும் அரசாங்கம் சில பிரதிநிதித்துவங்களைப் பெற்றுள்ளது.

கூடுவாஞ்சேரி, நன்மங்கலம், பல்லாவரம், பெருங்களத்தூர், செம்பாக்கம், சித்தலப்பாக்கம், செயிண்ட் தாமஸ் மவுண்ட், திருநீர்மலை, திரிசூலம், வல்லஞ்சேரி மற்றும் வண்டலூர் ஆகிய இடங்களில் உள்ள பெருங்கற்கால தளங்கள் விரைவான நகரமயமாக்கல் மற்றும் தொடர்புடைய வளர்ச்சி நடவடிக்கைகளால் மோசமாக பாதிக்கப் பட்டுள்ளன.

இதன் விளைவாக பாதுகாக்கப்பட்ட, தடைசெய்யப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப் பட்ட பகுதிகளுக்குள் ஆக்கிரமிப்புகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் ஏற்பட்டுள்ளன. அத்தகைய மீறல்களுக்கு எதிராக தொடர்புடைய விதிகளின் படி தொல்பொருள்துறை காரணம் காணும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. சம்பந்தப் பட்ட மாவட்ட அதிகாரிகள் மற்றும் உள்ளூர் காவல்துறையினருக்கு வழக்கு விவரங்கள் அனுப் பப்பட்டுள்ளன. மேலும் அங்கீகரிக்கப்படாத செயல்பாடுகளைத் தடுக்க தொடர்ந்து அவை ண்காணிக்கப்படுகின்றன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

### வாணியம்பாடி - ஆம்பூர் ரெட்டி தோப்பில்

# ரயில் மேம்பாலங்களை விரைந்து கட்டுவது குறித்து விவாதித்திடுக!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் ஒத்திவைப்பு தீர்மானம்!



புதுடெல்லி, டிச.10- நாடாளுமன்ற மக்களவையில் 08/12/2025 அன்று தி.மு.க.வின் வேலூர் எம்.பி. டி.எம். கதிர் ஆனந்த் பின்வரும் ஒத்திவைப்பு தீர்மானத்தை கொண்டு வர மக்களவை சபாநாயகருக்கு வைத்த கோரிக்கை விபரம் வருமாறு:-

“எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வாணியம்பாடி மற்றும் ஆம்பூரில் உள்ள ரெட்டி தோப்பு ஆகிய இடங்களில் ரயில் மேம்பாலங்களை விரைவாகக் கட்டுவது குறித்து விவாதிக்க இந்த சபை ஒத்திவைப்பு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி எனது வேலூர் மக்களவைத் தொகுதியில் இரண்டு முக்கியமான வணிக நகரங்கள். இரண்டும் அந்நியச் செலாவணி மற்றும் ஒன்றிய அரசின் கருவூலத்திற்கு கணிசமாக பங்களிக்கின்றன.

எனது வேலூர் மக்களவைத் தொகுதியில் மேம்பாலங்கள் அமைக்கும் பணிகளைப் பொறுத்தவரை, ரூ.21 கோடி செலவில் பெருமுகை மேம்பாலம் செயல்பாட்டில் உள்ளது. கண்டனேரி, வெட்டுவனம் மேம்பாலம் ரூ.75 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆம்பூர் ரெட்டித் தோப்பு பாலம் பணி நிறுத்தப்பட்டுள்ளது. LC81 ROB இல் உள்ள ஆம்பூர் புதிய நகரப் பாலம் காலத்தின் கட்டாயம், முக்கியமான தேவை. பயணிகளுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கும் என்பதால், மக்கள் சுரங்க பாதையை விரும்பவில்லை. ரயில் மேம்பாலங்கள் கட்டுதல் ஆம்பூரில் உள்ள வாணியம்பாடி மற்றும் ரெட்டி தோப்பு பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன.

இந்த இரண்டு ரயில் மேம்பாலங்கள் அப்பகுதிகளில் வசிக்கும் அலுவலக ஊழியர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் உட்பட அனைத்து தரப்பினர் பயணத்திற்கும் மிகவும் முக்கியமானவை. ரெட்டி தோப்பில் தற்போதுள்ள நிலத்தடி பாதை இருபுறமும் கடக்க வேறு வழியில்லாமல் ஏராளமான பயணிகளுக்கு போதுமானதாக இல்லை. மழைக்காலங்களில் இந்த சுரங்கப்பாதை மழை மற்றும் கழிவுநீர் இரண்டிலும் நிரம்பி வழிகிறது.

ஆம்பூர் மக்களின் இந்த அவல நிலையை ஆம்பூர், ரெட்டிதோப்புவில் ரயில் மேம்பாலம் கட்டுவதன் மூலம் மட்டுமே தீர்க்க முடியும். இது நியூ பெத்லகேம், கம்பிக்கொல்லை, நதிசீலபுரம், மலைமேடு, எம்.வி. சாமி நகர் மற்றும் நாய்க்கேனேரி, பனகத்தேரி ஆகிய மலைப்பாங்கான கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பயனளிக்கும்.

வாணியம்பாடி நியூடவுனில் உள்ள LC81 லெவல் கிராசிங் மட்டுமே தேசிய நெடுஞ்சாலையிலிருந்து நகரத்திற்குள் நுழைபவர்களுக்கு அணுகல் வழியாகும். தினந்தோறும் 120க்கும் மேற்பட்ட ரயில்கள் இப்பகுதியை இரு திசைகளிலும் கடப்பதால், கேட் அடிக்கடி மூடப்படுகிறது. அதனால் இங்கு தென்னக ரயில்வே ஒரு சாலை மேம்பாலம் அமைக்க முன்மொழிந்தது. ஆனால் அது இன்னும் கட்டப்படவில்லை. இந்த விஷயம் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது மற்றும் அரசாங்கத்தின் உடனடி கவனம் தேவை.

இவ்வாறு டி.எம். கதிர்ஆனந்த் பேசினார்.

# நாட்டின் தற்போதைய வேலையின்மை விகித விவரங்கள் என்ன?

## மக்களவையில் தே. மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, டிச.10- கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையில்

நாட்டின் தற்போதைய வேலையின்மை விகிதத்தின் விவரங்கள், சமீபத்திய அதிகாரப்பூர்வ தரவுகளின் படி, துறை வாரியாகவும், முந்தைய ஆண்டு களுடன் ஒப்பிடும்போது வயது வாரியாகவும் விவரங்கள்?

கடந்த மூன்று நிதியாண்டுகளில் உருவாக்கப்பட்ட மொத்த முறைசாரா மற்றும் துறை வேலைகளின் எண்ணிக்கை ?

இளைஞர்கள் மற்றும் கிராமப்புற தொழிலாளர்களிடையே அதிக வேலையின்மையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள், MGNREGA, PMKVY, DDUGKY மற்றும் பிற திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அப்படியானால் அதன் விவரங்கள்?

திறன் மேம்பாட்டை மேம்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள், பயிற்சி பெற்ற இளைஞர்கள் உண்மையில் பாதுகாப்பான வேலை வாய்ப்பைப் பெறுவதை உறுதி செய்வதற்காக தொழில் ஒத்துழைப்பு மற்றும் வேலைவாய்ப்பு ஆதரவு என்ன?

நாட்டில் வேலையின்மையை கணிசமாகக் குறைக்க ஒன்றிய அரசு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு மற்றும் இலக்கு பற்றிய விவரங்கள்? ஆகிய கேள்விகளை தே. மலையரசன் எழுப்பினார்.

### நிதிச் சீர்திருத்தம் என்ற பெயரில் அநீதி நடக்கிறது!

# நாட்டின் ஒற்றுமைக்கு தமிழ்நாடு ஒத்துழைக்கும்; ஆனால் மண்டியிட மாட்டோம்!

## மாநிலங்களவையில் - டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேச்சு!



புதுடெல்லி, டிச.9- மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட ‘சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தேசப் பாதுகாப்பு செஸ் மசோதா- 2025’ மீது நடந்த விவாதத்தில் டாக்டர் கனிமொழி என். வி.என். சோமு பேசியதாவது:

இந்தியக் குடியரசின் முக்கியமான மூன்று தூண்களான நிதி கூட்டாட்சி, அரசியலமைப்பைக் காக்கும் பொறுப்பு, பொது சுகாதாரம் ஆகிய விஷயங்களோடு தொடர்புடையது இந்த ‘சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு செஸ் மசோதா 2025’.

இந்த மசோதாவின் பெயரே சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. இந்தியில் ‘ஸே’ என்கிற வார்த்தை எதற்கு இந்த மசோதாவின் பெயரில் இடம்பெற்றுள்ளது? சட்டப்பூர்வமான எந்த வார்த்தைக் கட்டமைப்புடனும் இந்த வார்த்தை பொருந்தாது. இது சட்டப்பூர்வமான நடைமுறைகளுக்கு ஒவ்வாத, மொழி வழக்கத்தில் இல்லாத வார்த்தையும் கூட.

தேசியப் பாதுகாப்புக்கும், பொது சுகாதாரத்துக்கும் ஏற்படும் செலவுகளுக்காக செஸ் வரிவிதிக்க இந்த மசோதா வழிவகை செய்கிறது. குறிப்பாக பான் மசாலா மற்றும் புகையிலை விற்பனை மீது இந்த செஸ் விதிக்கப்பட்டு, அதன் வருவாய் பாதுகாப்பு செலவினங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று சொல்கிறீர்கள். அந்தத் தேவைக்கு மட்டும்தான் இந்தப் பணம் முழுமையாக செலவிடப்படுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி.

ஏனென்றால், 2019 ஆண்டு முதல் பல்வேறு வகைகளில் வசூலிக்கப்பட்ட செஸ் மற்றும் கூடுதல் வரிப்பணம் சுமார் ஆறு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இன்னும் செலவிடப்படாமலேயே இருக்கிறது. இந்த அரசு செஸ் வருவாயை நிர்வகிக்கும் மோசமான நிர்வா கத்தையே இது காட்டுகிறது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலம் பற்றி பேசும் போது, கடந்தகால வரலாற்றை மட்டும் நாம் பேசுவதில்லை. அந்தக் காலகட்டத்தில் இந்த நாட்டில் நிலவிய பொருளாதார அநீதி பற்றியும் நினைவு கூர்வோம். அந்தளவுக்கு இந்த நாட்டு மக்களின் வருவாயைச் சுரண்டியவர்கள் அவர்கள். இப்போதைய நிதி நிர்வாகத்தைப் பார்த்தால் அந்த அவலமான நிலைதான் நினைவுக்கு வருகிறது.

**நிதி நிர்வாகத்தில் மாநிலங்கள் புறக்கணிப்பு!**

நிதி நிர்வாக விஷ யங்களில் மாநில அரசுகளைப் புறக்கணித்து, வருவாய் மொத்தமும் ஒன்றிய அரசிடம் சேரும் வகையில்தான் இப்போது எல்லா விஷயங்களும் அமல்படுத்தப்படுகின்றன. இந்த நிலையை மாற்றத்தான் நாம் அனைவரும் ஒரு காலத்தில் போராடினோம் இப்போதும் அது தொடர்வது வேதனையான ஒன்று.

ஜி.எஸ்.டி. வரியை அறிமுகம் செய்தபோது, கூட்டாட்சித் தத்துவத்துக்கு மிகச் சிறந்த உதாரணம் இது என்று சொன்னார் நமது பிரதமர். இது எந்த ஒரு தனிப்பட்ட கட்சியின் சாதனை அல்ல... ஒட்டு மொத்த தேசத்தின் கருத்தொற்றுமையின் மூலமாக எட்டப்பட்ட சாதனை என்றார்.

ஜி.எஸ்.டி. அறிமுகமான போது, நவீன இந்தியாவை மாநில அரசுகளும் ஒன்றிய அரசும் இணைந்து உருவாக்குவதற்கான ஒரு விஷயமாக உருவகப்படுத்தினீர்கள். இதை அமல்படுத்தும் பொறுப்பை மட்டுமல்ல, அது தொடர்பான அதிகாரத்திலும், வருவாயிலும் கூட பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று மாநில அரசுகளுக்குச் சொன்னீர்கள். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை.

இந்த மசோதாவில் கூட, பான் மசாலா மற்றும் புகையிலை உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து செஸ் வசூலிக்கும் பொறுப்பு ஒன்றிய அரசிடமே கொடுக்கப்பட்டிருக்கிறது. சுகாதாரப் பாதுகாப்புக்காக இந்த வரி என்று சொல்லிவிட்டு, அதை முழுமையாக அமல்படுத்தும் மாநில அரசுகளிடம் இந்த வரி வசூல் பொறுப்பை ஏன் கொடுக்கவில்லை? உண்மையிலேயே இந்த மசோதா கூட்டாட்சி தத்துவத்துக்கு உயிர்கொடுக்கிறதா? அல்லது சீர்திருத்தம் என்ற பெயரில் சத்தமில்லாமல் அதை அழிக்கிறதா? உண்மை நிலவரம் மிகுந்த மனவேதனைக்குரியதாக இருக்கிறது.

ஜி.எஸ்.டி.யை அமல்படுத்துவதால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் நிதி இழப்பை ஈடுசெய்வோம் என்று சொல்லிவிட்டு, அதற்கு மாறாக செயல்படுவதற்குதான் இந்த மசோதா வழிவகுக்கும். இப்படிச் செய்தால் இணைந்த கூட்டாட்சி என்ற தத்துவம் என்னவாகும்?

அடுத்ததாக, அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாத்து அதன்படி நடப்பது. அரசமைப்புச் சட்டம் பிரிவு 14-ன் படி இந்த மசோதா எல்லோருக்கும் சமமான சுமையை, வாய்ப்புகளை, வழங்குவதாக அமைய வேண்டும். வரியை சமமாகப் பங்கிடுவோம் என்ற நம்பிக்கையில்தான் தமிழ்நாடு அரசு ஜி.எஸ்.டி.யை ஏற்றுக் கொண்டது. ஆனால் ஒவ்வொருமுறை இப்படி செஸ் வரி மசோதாக்கள் நிறைவேற்றப்படும் போதும், வருவாயை ஒன்றிய அரசு பெற்றுக் கொண்டு சுமையை மட்டும் மாநில அரசுகள் மீது ஏற்றும் வகையில் அந்த ஒப்பந்தத்தை ஒன்றிய அரசு மாற்றி எழுதுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழ்நாடு அரசின் பயம், கற்பனையோ, மிகைப்படுத்தப்பட்டதோ, அரசியல் உள்நோக்கம் கொண்டதோ இல்லை. ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியில் நிதிப் பகிர்வு விஷயத்தில் தமிழ்நாடு அரசு சந்தித்த அநீதி மற்றும் பாகுபாடுகள்எத்தனையோ உண்டு. சிலவற்றைச் சொல்கிறேன்.

**மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு அனுமதி இல்லை!**

தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய நிதியை தர மறுக்கிறது இந்த அரசு. காலாவதியான 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பைக் காட்டி மதுரை, கோவை மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. சென்னை மாநகர மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதியையும் உரிய காலத்தில் வழங்காமல், தொடர்ச்சியான அழுத்தங்களுக்குப் பிறகே வழங்கப்பட்டது.

சுகாதாரப் பாதுகாப்பைப் பொறுத்தவரை, பான் மசாலாவும் புகையிலையும் ஆரோக்கியத்திற்கு கேடானது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், மாநிலங்களுக்கும் வரிப் பகிர்வு என்ற தத்துவத்திலிருந்து, ஒன்றிய அரசுக்கு மட்டுமே வரி வருவாய் என்ற இலக்கை நோக்கிப் பயணிக்கிறதா இந்த அரசு? தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியின் போது நடந்த குட்கா முறைகேடு வழக்கு நினைவிருக்கிறதா? அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் அந்த முறைகேட்டை செயல்படுத்திய விதம் எப்படி தெரியுமா? கணக்கில் வராத குட்காவை கள்ள மார்க்கெட்டில் விற்று, பல லட்சம் இளைஞர்களின் வாழ்க்கையை சீரழித்து, கோடிக் கணக்கான பணத்தை லஞ்சமாகப் பெற்று, சுகபோக வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

இப்போதைய ஒன்றிய அரசும் அப்படித்தான் செய்யப்போகிறதா? மாநில அரசின் வருவாயைப் பறித்து ஆயிரக் கணக்கான கோடி ரூபாயை தனது பாக்கெட்டில் நிரப்பிக்கொள்ளப் போகிறதா? கூட்டாட்சித் தத்துவத்தைப் புதைத்து விட்டு, வரிப்பகிர்வு என்ற வார்த்தையையே மறந்து விட்டு இந்தப் பணத்தை தன் வசப்படுத்தப் போகிறதா ஒன்றிய அரசு?

இந்த நிலை களுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாகத்தான், எங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 12 வது நிதிக்குழு பரிந்துரையின்படி செஸ் மற்றும் கூடுதல் வரிகளை 10 சதவிகிதத்துக்குள் அமைத்துக் கொள்ளும்படி ஒன்றிய நிதி அமைச்சருக்குக் கடிதம் எழுதினார். அதற்கும் கூடுதலான வரிகளை மாநில அரசுகளுடன் பகிர்ந்துகொள்ளும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒன்றிய அரசின் 75 சதவிகித வருவாயை எல்லா மாநிலங்களுக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்றும் எங்கள் முதலமைச்சர் வலியுறுத்தினார். ஆனால், தமிழ்நாட்டிற்கான வருமானவரிப் பகிர்வு 15.52 சதமாகவும்; ஒன்றிய அரசின் சுங்க வரியில் 16.44 சதமாக இருந்தது 4.07 சதமாகவும் குறைக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

‘வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு’ என்றார் திருவள்ளுவர்.

செங்கோல் ஏந்தி ஆட்சியில் உள்ளவர்கள் தண்டிக்கும் இயல்போடு தன் குடிமக்களிடம் வரி வசூலிப்பது, ஆயுதத்தைக் காட்டி அப்பாவி வழிப்போக்கர்களிடம் கொள்ளையடிப்பதற்குச் சமம் என்று வள்ளுவர் சொன்னதையே நானும் வலியுறுத்திச் சொல்கிறேன்.

வலிமையான ஒன்றுபட்ட இந்தியாவுக்கு தமிழ்நாடு எப்போதும் துணை நிற்கும். ஆனால் மாநிலங்களை பலவீனமாக்கிவிட்டு இந்தியாவை வலிமைப்படுத்தவும் முடியாது; ஒற்றுமைப்படுத்தவும் முடியாது. ஒரு தேசம் பலமாக இருக்க வேண்டுமானால், அதன் மாநிலங்கள் பொருளாதாரத்தில், நிர்வாகத்தில் அரசியல் ஸ்திரத்தன்மையில் பலமாக இருக்க வேண்டும்.

ஆனால் மாநிலங்களுக்கு வரவேண்டிய வருவாயை எல்லாம் ஒன்றிய அரசு வைத்துக்கொண்டு, உரிமையான, நியாமான நிதி உதவிகளுக்காக மாநில அரசுகளை கெஞ்ச வைப்பது கூட்டாட்சித் தத்துவத்தின் ஆன்மாவைச் சிதைப்பதாகும்.

**தேச ஒற்றுமைக்கு தமிழ்நாடு ஒத்துழைக்கும்**

தேச ஒற்றுமைக்கு தமிழ்நாடு ஒத்துழைக்கும்; ஆனால் ஒருபோதும் மண்டியிடாது. எங்கள் உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். சீர்திருத்தம் என்ற பெயரில் வருவாயை, எங்கள் சுயாட்சியைப் பறிப்பதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

கூட்டாட்சித் தத்துவத்தைக் காக்க வேண்டும் என்று இந்த அவை விரும்பினால், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான சமநிலையை பாதிக்கச் செய்யும் எந்தப் பரிந்துரையையும் ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.



திருப்பத்தூர் ஒன்றியம் மடவாளம் ஆண் மற்றும் பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி மற்றும் 5 ஆண்டு கேள்வி வினா தொகுப்புகளை சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.